பதிவு எண்: M 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: மாசி 18 (1—3—68) வெள்ளி ★ வெளியூர்: மாசி 19 (2—3—68) சனி [இதழ்: 216

மத்திய வரவு—செலவுத் திட்டம்

★

வரவு	ரூ. 4,385.46	கோடி
செலவு	ரூ. 4,700.46	கோடி
பற்றுக்குறை	315	கோடி

குறிப்பு:—புது வரிகள் மூலம் கிடைக்கும் வருமானத்தின் காரணமாக, பற்றுக்குறை ரூ. 290 கோடியாகக் குறையும்.

காங்கிரசின் கடைசி நிதியமைச்சர்?

[எஸ். ஆர்.]

'அழகு செய்கிறேன்' என்று கூறி பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சையில் இறங்கிய மொரார்ஜி தேசாய், அழகைக் கொடுக்காவிட்டாலும்—அவரது முயற்சியினால்—'அசிங்கங்களையாவது விளைவிக்காமல் இருந்திருக்கலாம்!

ஆத்திகர்கள்—பழமைவாதிகள், 'அபசகுனம்' என்று விளிக்க—குழப்பம்—வெளிநடப்பு ஆகியவற்றுக்கிடையே நேற்று மாலை வெளியாகியுள்ள அவரது 'நிதி நிலை அறிக்கை', மீண்டும் பரிசோதனையாகத்தான் இருக்கிறதே தவிர, பொருளாதாரமோ, பொதுமக்களோ மனநிறைவு கொள்ளத்தக்க வகையினில் இல்லை!

துண்டுவிழும் ரூ. 315 கோடியில் ரூ. 219 கோடி ஈடு செய்யப்படாமல் அப்படியே விடப்படுகிறது; ஆனால், புது வரிகளும் இல்லாமல் இல்லை; ரூ. 65.73 கோடிக்குப் புதிய வரிகள் இருக்கின்றன! இதில் சுமார் நான்கில் ஒரு பங்கு—அதாவது ரூ. 15 கோடி மட்டுமே மாநிலங்களுக்குக் கொடுக்கப்படுகிறது; ரூ. 50.73 கோடி மத்திய அரசுக்கே உரித்தாகிறது!

இதையே வேறொரு வகையில் கூறினால், வரிப் பளுவினை மாநிலங்கள் தாங்க வேண்டும்; ஆனால், வரிகளினால் கிடைக்கும் தொகையின பெரும் பகுதி புதுடில்லிக்கே போகும்! எனவே, பலனுக்கு அங்கேதான் பார்வையைப் பதித்திருக்க வேண்டும்!

"மத்திய அரசின் 'பட்ஜெட்'டில் புதிய வரிகள் இருக்காது—இருக்கக்கூடாது" என்று எவரும் நம்பவில்லை—கருதவில்லை!

ஆனால், 'பற்றுக்குறை பட்ஜெட்டாக இருப்பதைத் தவிர்ப்பேன்' என்று 'சபதம்' மேற்கொண்ட மொரார்ஜி தேசாய் தோற்றுப் போயிருப்பதனைப் பார்க்கும்போதுதான், நாட்டின் பொருளாதார நிலை பற்றிய பயங்கரத்தன்மை புரிகிறது!

நிதித் துறையில் மாநிலங்களுக்கு அறிவுரைகள்—எச்சரிக்கைகள் விடுக்கும் மத்திய அரசு, தானே அவைகளை மதித்து நடக்கிறதா என்ற கேள்விக் குறியினைத்தான் மொரார்ஜியின் பட்ஜெட் எழுப்புகிறது!

மக்கள்மீது வரிகளை விதிக்கும்போதுதான், மத்திய அரசு அவர்களுடன் நெருங்கிவருகிறதே தவிர, மக்களது அன்றாடப் பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியது மாநில அரசுகளாகவே இருப்பது, 'வரிகள் இன்னும் 'ஒரு வழிப் பாதை'யில்தான் இருக்கின்றன' என்பதனைக் காட்டுகின்றன!

"ரூ. 3,132 கோடியாக இருக்கும் மத்திய அரசின் வருமானத்தில், பாதுகாப்புச் செலவு மட்டும் ரூ. 1,015 கோடி ஆகிவிடுகின்றனவே" என்று கேட்பதோ ஆச்சரியப்படுவதோ, வேறுவேறு பிரச்சினைகளுக்கு இடமளிக்கும்! எனவே, புள்ளிவிவரத்தைத் தெரிந்து கொள்வதுடன் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

'அன்யுட்டி டிபாசிட்' ரத்து ஆவதும், கம்பெனி வரிகளில் மாற்றம் இருப்பதும், வருவோரின் வரி முறைகளில் அதிக வருமானம் ஏற்படுத்தியிருக்கும் சீர்திருத்தமும், 'சர்டாக்ஸ்' வரியினைக் குறைத்திருப்பதும், சாதாரணப் பொதுமக்கள் உணரக் கூடிய ஒன்றல்ல!

அதேபோல், ஆடம்பரப் பொருள்கள் மீதான வரி விதிப்பும், மதுபானங்கள் மீதான தீர்வைகளும் உயர் மட்டத்திலுள்ளவர்களை மட்டுமே பாதிப்பதாகும்!

ஆனால், தபால்—தந்திக் கட்டண உயர்வு, புகையிலை, குறைந்த விலை ரேடியோ, ஸ்டீல் நாற்காலிகள், டீசல், மிட்டாய்கள், சாக்லெட்டுகள், பிளாஸ்டிக் பொருள்கள் ஆகியவை மீதான வரி உயர்வு, உடனடியாக நடுத்தர—ஏழை மக்களை நீக்கமறப் பாதிக்கும் தன்மையினைக் கொண்டவையாகும்!

ஒரு சேலம் இரும்பாலைத் திட்டத்துக்காகப் பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் 'போராடும்' தமிழகத்துக்குச் சமாதானங்கள் சொல்லும் மத்திய அரசு, ஏற்கனவே, 'தேவையானதுதானா?' என்ற கேள்விக்கு ஆளாகியிருக்கும் பொக்காரோ இரும்பாலைக்காக இந்தப் 'பட்ஜெட்'டில் மட்டும் ரூ. 110 கோடி ஒதுக்கியிருப்பதனை, எல்லா மாநில அரசுகளும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

நிதிநிலை அறிக்கையிலேயே, கண்ணையும் கருத்தையும் 'கவருவது', தபால்—தந்திக் கட்டண உயர்வுதான்!

ரூ. 300 கோடியினைத் துண்டாகவிட்டிருக்கும் மொரார்ஜி தேசாய், தபால்—தந்திக் கட்டண உயர்வின் மூலம் கிடைக்கும் ரூ. 25 கோடியினையும் சேர்த்திருந்தால், இந்தியாவை எந்த வெள்ளமும் கொண்டுபோய்விடப் போவதில்லை! தலைக்கு மேலே போய்விட்ட நிலையில், 'சாண் போனால் என்ன—முழம் போனால் என்ன' என்று திருப்தியடைந்திருக்கலாம்!

'வெள்ளைக்காரன் ஆட்சி பரவாயில்லையே' என்று இந்தியத் துணைக்கண்டத்தில், அரசியல் தெரியாத எந்த ஒரு மனிதனும் இன்னும் கூறிக்கொண்டிருக்கிறானென்றால், அது, அந்த நாளில் விற்ற கார்டு—கவர் விலைகளை வைத்துத்தான்!

சுதந்தர இந்தியாவில், தபால் கட்டண உயர்வு பெற்ற சுதந்தரத்தினை, இதுவரையில் எந்தப் பொருளும்—மனிதரும் அடையவில்லை!

"அவசியமானதற்கு மட்டும் கடிதம் எழுதுங்கள்" என்று—கட்டண உயர்வுக்காக மத்திய அமைச்சர் ஒருவர், நேற்றே சமாதானம் சொல்லியிருக்கிறார்!

'பசிக்கிறதா? கேக் சாப்பிடுங்கள்' என்று கூறிய மேரி அண்டாய்னட் வரிசையில், மத்திய அமைச்சர்கள் நாள்தோறும் பெருகிவருவதைத்தான் இது காட்டுகிறது!

எலி, புல் பூண்டு ஆகியனவற்றைச் சாப்பிடச் சொன்னவர்கள், இப்போது, 'கடிதம் எழுதும் பழக்கத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்' என்கிறார்கள்!

'சனநாயகம் அல்ல—வரி நாயகம்' என்று கேரள முதல்வர் நம்பூதிரிபாடு, பட்ஜெட்டுக்குச் சூட்டியுள்ள பெயருக்கு, ஆயிரம் பாராட்டுகள் வழங்கலாம் போலிருக்கிறது!

காங்கிரசு உறுப்பினர் அனுமந்தையாவே ஒப்புக்கொள்ளும்படி, சாதாரண மனிதனை மட்டும் முழுக்க முழுக்கப் பாதிக்கிறது மொரார்ஜியின் பட்ஜெட்!

தென்னேட்டி விசுவநாதன் கூறியிருப்பதனைபோல், முதலாளிகளுக்கும் மொரார்ஜிக்கும் நடந்த 'பேச்சுவார்த்தை'தான் இந்தப் பட்ஜெட்!

'நாசிக் அச்சகம் இருப்பது எங்களிடத்தில்தான்' என்று மத்திய அரசு, மீண்டும் ஒரு முறை காட்டிக்கொள்வதைப் போலத்தான், ஏற்கனவே உள்ள விலையேற்றம் போன்ற பிரச்சினைகளை முற்றிலும் மறந்த நிலையில் தயாரித்திருக்கிறார் மொரார்ஜி தேசாய்!

மாநில அரசுகளின் ஒத்துழைப்பினை எல்லாவற்றுக்கும் கோரும் மத்திய அரசு, இதுபோன்ற நிதி நிலை அறிக்கைகளை நாட்டுக்கு அளிப்பது, மாநில அரசுகளை மறைமுகமாகவும் நேர்முகமாகவும் இடர்களில் ஆழ்த்துவதற்குத்தான் வழிவகுக்குமே தவிர, வேறொன்றுமில்லை!

நீரில் மூழ்கித் தப்பித்துவரும் நிலையில் உள்ள மாநில அரசுகளுக்கு—மொரார்ஜியின் பட்ஜெட்—உதவக்கூடிய வகையில் இல்லை!

"தமிழக அரசின் பட்ஜெட்டில் வரிகளே இல்லை" என்று 'குறை'பட்டுக் கொண்ட இங்குள்ள காங்கிரசுக்காரர்கள், இப்போதாவது நிறைவடையட்டும்!

இதுவரையில் இல்லாத வகையில், நிதியமைச்சர் பட்ஜெட்டினை வெளியிடுவது, 19 நிமிடம் தாமதிக்கப்பட்டிருக்கிறது. பிறந்த நாளென்றும் பாராமல் அவரை 'மொரார்ஜி பைட்டோ' என்ற கூக்குரல்கள் வாழ்த்தியிருக்கின்றன!

மொரார்ஜியின் அடுத்த பிறந்த ஆண்டு வருவதற்கு, இன்னும் நான்கு ஆண்டுகள் ஆகும்!

இந்த வகையில் பார்த்தால், 'இதுவே காங்கிரசின்—மொரார்ஜியின் கடைசி நிதி நிலை அறிக்கை' என்பதற்கான ஒரு 'சூசக' அறிவிப்புதானோ இது—என்று எண்ணத் தோன்றுகிறது!

13 ஆண்டுகளாக 'சிறை'யிலிருக்கும் காந்தி சிலை!

மத்தியப் பிரதேசத்திலுள்ள உஜ்ஜயினி நகராட்சிமன்றம், 13 ஆண்டுகளுக்கு முன்பு ரூ. 25,000 கொடுத்து காந்தியாரின் சிலை ஒன்றை வாங்கியிருந்தது. இத்தனை ஆண்டுகளும் இந்தச் சிலை நகராட்சிமன்றத்திற்குச் சொந்தமான கிடங்கிலேயே உறங்கிக் கொண்டிருந்ததாம்! "இந்தச் சிலையை கிடங்கிலிருந்து வெளியே கொணர்ந்து பொது இடத்தில் வைக்கவேண்டும்" என்று இப்போது உஜ்ஜயினி நகர மக்கள் கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறார்களாம்!

'மக்களைப் பாதிக்கும் முடிவை மறுபரிசீலனை செய்க'

'தமிழக இரயில்பாதைகளை அகற்றவேண்டாம்'—மத்திய அரசுக்குத் தமிழக அரசு மடல்—சட்டமன்றத்தில் அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

சென்னை, மார்ச் 1—

தமிழகத்தில் உள்ள நான்கு இருப்புப் பாதைகளை, பொருளாதாரக் காரணங்காட்டி, அகற்றிவிட மத்திய அரசு முனைந்திருப்பது குறித்துக் கழக உறுப்பினரான திரு. எஸ். இராமச்சந்திரன், சட்டமன்ற விதி 41-வது பிரிவின்படி கவனஈர்ப்புத் தீர்மானம் ஒன்றினை இன்று சட்டமன்றத்தில் கொண்டுவந்தார்.

பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், இதுகுறித்து அரசு எடுத்துக்கொண்டுள்ள முயற்சியை விளக்கி அறிக்கையொன்றை வெளியிட்டார்.

அமைச்சர் தமது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:—

"தமிழகத்துக்குப் பயன்தரக் கூடிய நான்கு இருப்புப் பாதைகளை,

1. மேட்டுப்பாளையம்—உதகமண்டலம்
2. மாயூரம்—தரங்கம்பாடி
3. பேரளம்—காரைக்கால்
4. நீடாமங்கலம்—மன்னார்குடி

எடுத்துவிட மத்திய அரசினர் கருத்துக் கொண்டிருக்கின்றனர்; இதன் விளைவாக சாலைப் போக்குவரத்தைக் கூடுதலாக்கும் பொருட்டு நிதி வசதியளிப்பதாக மத்திய அரசினர் அறிவித்துள்ளனர்.

இதுபற்றி இந்த அரசு பரிசீலித்தது; 'சாலைப் போக்குவரத்துக்களை அதிகரிப்பதன் மூலம் நிலைமையைச் சமாளித்துவிட முடியாது' என்று இந்த அரசு மத்திய அரசுக்கு விளக்கிக் கடிதம் எழுத முடிவு செய்துள்ளது.

"உல்லாசப் பயணிகளுக்கு முக்கிய இடமாக உள்ள உதகமண்டலத்துக்குச் செல்லும் இரயில் பாதையை, பொருளாதாரக் கண்ணோட்டத்துடன் எடுத்துவிடக் கருதுவது சரியல்ல; இதனால், நீலகிரியில் வாழும் மக்களின் பொருளாதார நிலை பாதிக்கும்; ஏராளமாக மாணவர்களும், ஆசிரியர்களும் குறைந்த கட்டணத்தில் இரயிலில் வந்து போகிறார்கள். இரயிலை எடுத்துவிட்டால் அவர்களும் பாதிக்கப்படுவார்கள்.

"தேயிலை—காபித் தோட்டங்களைப் பொறுத்தும், பொதுமக்களின் தேவையைப் பொறுத்தும் இந்த இருப்புப்பாதை மிகவும் தேவையான ஒன்று. ஆசிரியர்—மாணவர்கட்கு வழங்கும் குறைந்த கட்டணச் சலுகை சாலைப் போக்குவரத்தான பேருந்துகளில் கிடையாது. மேலும், சாலைப் போக்குவரத்துக்களினால் மட்டுமே போக்குவரத்து வசதிகளை நிறைவு செய்துவிட முடியாது. மேலும், நீலகிரி மலைப் பகுதியாக இருப்பதால் சாலை வசதிகளை அதிகரிக்க முடியாது.

"தஞ்சை மாவட்டத்தில் அரிசி—நெல் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் மிகவும் தேவைப்படுகிற இரயில் பாதைகளை அகற்றுவது கூடாது; எனவே, மேற்படி நான்கு பாதைகளையும் எடுத்துவிடும் முடிவை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று, தமிழக அரசு மத்திய அரசுக்கு எழுத இருக்கிறது; மத்திய அரசும் தன் முடிவைக் கைவிடும் என்று நம்புகிறோம்."

அடுத்து, திரு. இராமச்சந்திரன் கூறியதாவது:—

"இந்தியத் துணைக் கண்டத்திலேயே 'மூன்று தண்டவாளங்களுடைய இரயில் பாதை மேட்டுப்பாளையம்—உதகை பாதைதான். எனவே, தனிச் சிறப்பு வாய்ந்த இந்தப் பாதையைப் பொருளாதாரக் கண்ணோட்டத்துடன் அணுகாது, பொதுமக்கள் நலனைக் கருதி அகற்றாமல் இருக்க மத்திய அரசுக்கு இந்த அரசு எடுத்துச் சொல்லி, அந்த முயற்சியைத் தடுக்க வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்."

கடமையை ஆற்றுவதில் முதலில் நிற்பது தமிழகமே!

விவேகமுடன் நடந்ததற்குத் தண்டிக்கப்படுகிறோம்!

கேட்டதைக் கொடுக்க மறுத்தாலும் வட்டியும்--முதலும் வசூலிப்பதில் மத்திய அரசு கெடுபிடி காட்டத் தவறவில்லை!

'எண்ணற்ற இடர்ப்பாடுகளுக்கிடையிலும் மக்கட்கு உதவும் திட்டங்கள் தருகிறோம்'- கழக அரசின் நிதிநிலை அறிக்கை--முதலமைச்சர் அறிஞர் அண்ணா விளக்கம்

"இம்மாநிலம், தனது குறிக்கோள் அளவில் 80 சதவிகித அளவினை நிறைவேற்றியுள்ளது. எனக்குக் கிடைத்துள்ள தகவல்படி, நான்காம் திட்டத்திற்கான நிதி வசதிகளைத் திரட்டுவதைப் பொறுத்தவரையில்—வேறு எந்த மாநிலமும்—நமது மாநிலத்தைப்போன்று இந்த அளவுக்குச் சிறப்புறச் செயல்படவில்லையெனத் தெரிகிறது.

"விரயமாகிற திட்டங்களை நாம் தவிர்த்திருப்பதோடு—நம்முடைய திறமைக்குள் செவ்விய முறையில் நிறைவேற்றி—நிர்வகிக்கக்கூடிய திட்டங்களில் மட்டுமே நாம் நாட்டம் செலுத்தியிருக்கிறோம்.

"உணவுத் தானியக் கொள்முதல் திட்டத்தைச் செவ்விய முறையில் செயல்படுத்தியதன் வாயிலாக, தானியங்கள் இடையீடின்றி வழங்குவதற்கான ஒரு நிலைமையை உருவாக்க முடிந்தது. நாட்டின் வேறெந்தப் பகுதியையும்விட உணவுத் தானியங்களின் வெளி அங்காடி விலை, நமது மாநிலத்தில் நியாயமான அளவில் நிலைபெற்றுள்ளது.

"நிதி நெருக்கடி எதனிலும் சிக்காமல் இதுகாறும் இயங்கிவந்துள்ள ஒரு மாநிலம்—திட்டத்திற்குத் தேவையான நிதி வசதிகளைத திரட்டுவதில் பின்னடையாத ஒரு மாநிலம்—தனது திட்டங்களின் வளர்ச்சி ஓட்ட ம்தளராமல் பேணிவருவதற்கென, அதற்கு இத்தருணத்தில் உதவி புரிய வேண்டுவது மத்திய அரசின் கடமையாகும். அவ்வாறு உதவி அளிக்க மறுப்பது, கடந்த காலத்தில் நாம் விவேகத்துடன் செயலாற்றியமைக்காக நம்மைத் தண்டிப்பதற்கு ஒப்பாகும்!"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், வரவு-செலவுத் திட்டத்தை அளித்து நிகழ்த்திய உரையில் வேதனையோடு குறிப்பிட்டார்கள். இருக்கின்ற நிதிநிலை நெருக்கடிகளுக்கிடையேயும், உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் நிலையிலும் தமிழகம் எந்த அளவுக்குத் தனது பொறுப்புக்களை உணர்ந்து கடமைகளை நிறைவேற்றி வருகிறது என்பதையும், மத்திய அரசு மாநிலத்துக்கு உதவுவதில் எப்படியெப்படியெல்லாம் பொறுப்புணராமல் நடந்துகொண்டு வட்டி வசூலில் மட்டும் கெடுபிடி செய்து வருகிறது என்பதையும் அண்ணா அவர்கள் மனந்திறந்து கூறியிருக்கிறார்கள்.

இத்தனை இடர்ப்பாடுகளையும் சமாளித்து, புதிய வரி போடாமலும், பற்றுக்குறை ஏற்படாமலும் வரவு-செலவுத் திட்டத்தைத் தாம் உருவாக்கிய சூழ்நிலையை அண்ணா அவர்கள் பின்வருமாறு விளக்கியுள்ளார்கள் :—

மத்திய உதவி நமக்குக் கிடைத்தது எவ்வளவு?

மத்திய அரசுக்கும் – மாநில அரசுகளுக்கும் இடையே நிதி வசதிகளைப் பகிர்ந்தளிப்பதிலுள்ள அகன்ற வேறுபாடு ஒருபுறம் இருக்க, மத்திய அரசு, வளர்ச்சித் தலைப்பின்பாற்படாத தனது செலவினத்தைக் கட்டுப்படுத்தி நிறுத்தத் தவறியமையே—குறிப்பாகக் கடந்த மூன்றாண்டுகளில்—திட்ட முன்னேற்றம் தடைப்பட்டதற்குப் பெரிதும் காரணமாகும்.

நான்காம் திட்டத்திற்குரிய மொத்த மத்திய உதவியை எடுத்துக்கொண்டாலும், இந்த மாநிலத்திற்கு வழங்குவதற்காக ஒப்புக்கொண்ட தொகை குறைவுதான்.

இம்மாநில மக்கள் தொகைக் கணக்கின் அடிப்படையில் நமக்கு 7.8 சதவீதத்திற்காவது மத்திய உதவி கிடைத்திருக்க வேண்டும்; ஆனால் மாறாக, ஒப்புக்கொள்ளப்பட்ட உதவி, மொத்த மத்திய உதவியில் 7 சதவீதமாகவே இருந்தது.

நமது வேண்டுகோளின் நிலை என்ன?

சென்ற ஈராண்டுகளில் மாநிலங்களுக்குச் சேரவேண்டிய விகிதப்படியான உதவியைப் பெறாத ஒரு சில மாநிலங்களுள், நான்காம் நிதி ஆணைக் குழுவின் தீர்ப்பினையொட்டி, திட்டத்திற்குப் புறம்பான கணக்கில் உபரி எதுவும் பெற்றிராத மாநிலம், நமது மாநிலம் ஒன்றுதான். இதைக் கருதியாவது, திட்ட ஆணைக் குழு நமது வேண்டுகோளுக்குச் செவி சாய்த்திருக்க வேண்டும்.

மத்திய உதவியை வழங்குவதில் இவ்வாறு ஏற்படும் தேக்கம் ஒருபுறமிருக்க, மாநிலத் திட்டங்கள் அனைத்திற்கும் சேர்ந்து வழங்கப்படும் மத்திய உதவி வளராது நின்றதோடு, ஓரளவிற்குக் குறைந்தும்விட்டது!

மத்திய உதவியின் வளர்ச்சியில் ஏற்பட்டிருக்கிற இந்த இடை ஒய்வு ஒருபுறமிருக்க, மாநிலங்கள் பங்குகொள்ளும் மத்திய வரிகள், எழுச்சி அடையவேண்டிய அளவு எழுச்சி பெறவில்லை.

வருமான வரியின்கீழ் கிடைக்கும் தொகையில் 75 சதவீதம் மாநிலங்களுக்கு இடையே பிரித்துக்கொடுக்கப்படவிருப்பதால், இது பெரும்பாலும் மாநில வருவாய் வாயில்களில் ஒன்றாகவே மாறியுள்ளது.

இந்த வரியை விதித்துத் திரட்டும் பொறுப்பு மத்திய அரசைச் சார்ந்தது என்றாலும், முனைந்து வசூல் செய்வதில் மத்திய அரசின் இயந்திரத்தில் குறை ஏதும் ஏற்படின், மாநிலங்களே பெரிதும் அல்லற்படுகின்றன.

விற்பனை வரியிலிருந்து, 1966—67-ல் ரூ. 44 கோடி அளவுக்கு வருவாய் கிட்டியிருக்க, நமது மாநிலத்தில் நிலுவையில் நின்ற தொகையின் மொத்தம் ரூ. 7 கோடி மட்டுமே ஆகும்; இது, இதற்கான ஆண்டு வருவாயில் 16 சதவீதமே!

வளரும் கடன் சுமை--டெல்லியின் போக்கு!

முதல் திட்டத்தின் தொடக்கத்திலே—1950-ல் இந்திய அரசிற்குச் சேரவேண்டிய கடன் ரூ. 14 கோடியாக இருந்ததற்கு மாறாக, மூன்றாம் திட்ட இறுதியில் ரூ. 270 கோடிக்கு மேல் உயர்ந்திருந்தது; அது இப்போது ரூ. 800 கோடிக்கு மேல் உயர்ந்துள்ளது!

மத்திய அரசிடமிருந்து பெறும் கடன்களுக்கு உரிய சராசரி வட்டி விதம், 1955-56-ல் ஏறக்குறைய இரண்டரை சதவீதமாக இருந்ததற்கு மாறாக, இப்போது நாலரை சதவீதத்திற்குமேல் போகிறது!

இவை இரண்டின் விளைவாக இந்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய வட்டித் தொகை, 1950-51-ல் ஏறக்குறைய ரூ. 41 இலட்சமாக இருந்தது, 1968-69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஏறத்தாழ ரூ. 15 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது!

இந்திய அரசுக்குச் செலுத்தவேண்டிய வட்டித் தொகைகளின் சுமையினால் பல மாநிலங்கள் தடுமாறி நிற்கின்றன; எனவே, மாநில அளவில் செய்யப்படுகின்ற மூலதன முதலீட்டின் கணிசமான பகுதியின் ஆதாயமற்ற தன்மையை இந்திய அரசு கவனித்து, வட்டி வீதம் குறித்தும், கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டிய கால அளவினைக் குறித்தும் தற்போதுள்ள கடும் நிபந்தனைகளைத் தளர்த்தியமைத்து ஆறுதல் அளிக்க வேண்டுமென மாநில அரசுகள், இந்திய அரசுடனும், தொடர்ந்துவந்த நிதி ஆணைக் குழுக்களுடனும் வாதிட்டு வந்துள்ளன.

பற்பல மாநிலங்களிலிருந்து தனக்குச் சேரவேண்டிய கடனைத் தொகுப்பதற்கான சில செயற் குறிப்புக்களை இந்திய அரசு இப்போது அனுப்பியுள்ளது; ஆனால், அது தயாரித்து அனுப்பியுள்ள செயற்குறிப்புக்கள், பெரும் பலன் அளிக்கமாட்டா!

குறிப்பாக அவை கடனில் கணிசமான பகுதி—நீர் வழங்குதல், புயல் அல்லது பஞ்சம் காரணமாக ஏற்பட்ட துயர் துடைத்தல் அல்லது பொற்கொல்லர்கள் துயர் துடைத்தல், அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல் போன்ற நோக்கங்களுக்குச் செலவிடப்பட்டுள்ளன என்பதையும், அத்தகைய கடன்கள், நியாயமாக மானியங்களாக மாற்றப்பட வேண்டியவை என்பதையும் நாட்டத்திற் கொள்ளாமல் தயாரிக்கப்பட்டுள்ளன.

வட்டிச் செலவுகள் ஒருபுறமிருக்க, 1968-69-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தை நடப்பு ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகைகள் மிகவும் அதிகரித்துள்ளன.

நடப்பு ஆண்டில் 20 கோடியே 50 இலட்சம் ரூபாய் திருப்பிச் செலுத்த வேண்டியிருப்பதற்கு மாறாக, நாம் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை—குறுகிய காலக் கடன்களை நீக்கிப் பார்த்தாலும்—ரூ. 7 கோடி கூடுதலாகி, மொத்தம் 27 கோடியே 30 இலட்சம் ரூபாய் அளவில் உள்ளது.

அடுத்த ஆண்டில், திட்டத்திற்கான நமது நிதி வசதிகள் கரைவதற்குக் காரணமான முக்கியக் கூறுகளில் இது ஒன்றாகும்.

நிதி ஆண்டினை முழுமையாக எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, ரிசர்வ் வங்கியிடமிருந்து அதிகப் பற்று (ஓவர்-டிராப்ட்) இன்றி நாம் இதுகாறும் நமது நிதி நிலையைச் சமாளித்து வந்திருக்கிறோம்!

மத்திய--மாநில அரசுகளுக்கிடை நல்லுறவு வளர..!

அரசியல் சட்ட விதிகளை மறு ஆய்வு செய்யும் வகையில் புதிய நிதிக் குழு

டில்லிக்கு முதலமைச்சர் அண்ணா வழங்கும் ஆய்வுரை

"சிக்கனத்தையும் நிதி ஒழுங்கினையும் பெரும் அளவிற்குக் கடைபிடிக்க வேண்டியதன் தேவையை நாம் ஏற்றுக்கொள்கிற அதே நேரத்தில், மாநிலங்களின் பொறுப்புக்களுக்கும் அவற்றின் நிதி வசதிகளுக்குமிடையே நிலவியுள்ள அடிப்படையான சம நிறைவற்ற நிலையைச் சுட்டிக்காட்டுவது நமது கடமையாகும்.

"நமது திட்டங்களின் மூலம் உருவாக்க எண்ணியுள்ள நல்லதோர் உயர் வாழ்வினை வகுத்துக் கொடுக்கும் வகையில், நமது மக்களின் குறைந்த தேவைகளை மாநிலங்கள் செவ்விய முறையில் நிறைவேற்ற வேண்டுமெனின், இந்தச் சம நிறைவற்ற நிலையை நாம் நீக்கியாக வேண்டும்.

"இதுவரையில் நான்கு நிதி ஆணைக் குழுக்களை நாம் கண்டுள்ளோம்; ஆனால், அவற்றின் பரிவுரைகள், சம நிறைவற்ற நிலையைச் சீர் செய்வதற்குப் பெருமளவில் பயனளிக்கவில்லை.

"மாநிலங்களின் தற்போதைய நிறுவனங்களையும் பணிகளையும் பேணிவருவது குறித்து—அவற்றின் தேவைகளை இறுதி செய்து அறிந்து—இந்த நிறுவனங்களையும், பணிகளையும் பேணிவருவதற்கு மட்டுமே போதுமான அளவில் அவைகளுக்கு நிதி வசதிகளை வகைசெய்து தருவதில்தான், அவற்றின் முக்கிய முயற்சிகள் நெறிப்படுத்தப்பட்டுள்ளன.

"எனவே, வளர்ச்சிப் பணிகளின் தேவைகள் அனைத்தும் மத்திய அரசின் விருப்ப உதவிக்கே விட்டுவிடப்பட்டு, மாநிலங்கள் மத்திய அரசையே முற்றிலும் அண்டியிருக்கும் நிலைக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டன.

"1969—70-ம் ஆண்டிலிருந்து புதிய நான்காம் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென்று முடிவு செய்துள்ளதால், புதிய நிதி ஆணைக் குழு ஒன்றை நியமிப்பது அவசியமென்று எங்கணும் உணரப்படுகின்றது.

"எனவே இத்தருணத்தில், அப்புதிய நிதி ஆணைக் குழுவின் ஆய்வு வரம்பு, ஏனைய பொருள்களோடு நிதி வசதிகளை மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிப்பது குறித்த அரசியலமைப்பின் விதித் துறைகளை ஆழ்ந்து மறு ஆய்வு செய்யவேண்டும் என்கிற பொருளும் அடங்கும்படி விரிவுபடுத்தப்பட வேண்டுமென்கிற கருத்தினைத் தெரிவித்துக் கொள்ள விழைகின்றேன்.

"புதிய நான்காம் திட்டத்தின் தொடக்கத்திற்குப் போதிய அளவு முன்கூட்டியே மூன்றாம் திட்டத்திற்கும்—நான்காம் திட்டத்திற்கும் இடையே நிறைவேற்றப்பட்டுள்ள ஆண்டுத் திட்டங்கள் மூன்றின் பேணு நற்செலவினத்தின் பொருட்டு, மாநிலங்களுக்கு எவ்வகையில் நிதி மாற்றம் செய்து தரவேண்டும் என்கிற குறுகிய கேள்விக்கு விடைபகரும் வகையில்—இடைக்கால அறிக்கை ஒன்றினை வெளியிடுவதற்கு ஊறு நேராவண்ணம், மேற்சொன்ன மறு ஆய்வினை நிதி ஆய்வுக்குழு மேற்கொள்ள இயலும்.

"நான் கருதியுள்ள இந்த மறு ஆய்வு, எந்த வகையிலும் மத்திய அரசின் வலிமையைக் குறைக்குமென்றோ, நாட்டின் ஒற்றுமையைத் தகர்க்குமென்றோ அஞ்சுவதற்கு எவ்வித நியாயமுமில்லை; மாறாக, மாநிலங்களுக்குள்ள பொறுப்புக்களை—அவை நிறைவேற்

(3-ம் பக்கம் பார்க்க)

கல்விவளர்ச்சியில் கழக அரசு காட்டும் அக்கறை

வருவாயில் 23 சதவிகிதம் செலவிடத் திட்டம்

ஆறு இடங்களில் புதிய கல்லூரிகள் -- அதிகப்படி ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு

"மத்திய – மாநில அரசுகளின் இடர்ப்பாடான நிதி நிலை காரணமாகத் திட்ட ஆணைக் குழு, சமூகப் பணிகளுக்கு மிகக் குறைந்த அளவில் நிதி ஒதுக்கம் செய்யுமாறு பரிவுரை செய்திருப்பினும், இத்துறையின் வேலைத் திட்டங்களின் நியாயமான – குறைந்த அளவுத் தேவைகளுக்கு வகைசெய்ய முயன்றுள்ளோம்.

"பொறுப்பேற்கப்பட்ட செலவினம் உட்பட 1968-69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 'கல்வி'த் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை 56 கோடியே 28 இலட்சம் ரூபாய் ஆகும்; இத்தொகை, நமது மாநில வருவாயில் 23 சதவீதமாகும்.

"ஊராட்சி ஒன்றியங்களுக்கு நடப்பு ஆண்டில், அகவிலைப் படிக்கான மானியம் முன்கூட்டியே வழங்கப்பட்டது போன்ற சில கூறுகளை நீக்கிப் பார்த்தால், அடுத்த ஆண்டின் கல்விக்கான செலவினத்தின் நிகர உயர்வு, ஏறக்குறைய ரூ. 6 கோடி அளவில் அமைவதைக் காணலாம்.

இத்துறைக்குரிய ஆண்டுத் திட்டத்தில் 6 முதல் 11; 11 முதல் 14; 14 முதல் 17 வயதுத தொகுதிகளில் உள்ள மாணவர்களைப் பள்ளியில் சேர்த்துக் கொள்ளுவதற்கு ஏற்ப, மொத்தத்தில் கூடுதலாக 7,200 ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

"பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்துவதற்கு நியாயமான தொகை ஒதுக்க வேண்டியதன் தேவையைக் கருத்திற்கொண்டு பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 32 இலட்சமும், அறிவியற் கருவிகளின் வகைக்காக ரூ. 44 இலட்சமும் அரசு ஒதுக்கியுள்ளது.

"தொடக்கக் கல்வி நமது மாநிலம் முழுவதிலும் இலவசமாகவும், கட்டாயமாகவும் ஏற்கனவே அளிக்கப்பட்டு வருவதால், இத்துறையில் இப்போது அரசின் முயற்சிகள், கல்வியின் தரத்தை உயர்த்தும் பான்மையில் நெறிப்படுத்தப்படும்.

1968-69-ல் 3,000 உயர் துவக்கத் தர ஆசிரியர் பதவிகள், இடைநிலைத் தர பதவிகளாக மாற்றப்படும்.

"ஆசிரியர்கள் உயர்ந்த கல்வித் தகுதிகளைப் பெற்றுச் செவ்விய முறையில் மாணவர்களுக்குக் கல்வி புகட்ட -- அவர்களுக்கு ஓரளவுசகு ஊக்கமளித்திட வேண்டி -- உயர்ந்த கல்வித் தகுதிகளைப் பெறுகின்ற ஆசிரியர்களுக்கு இரண்டு சம்பள உயர்வுகளை முன்கூட்டி அளிக்கும் ஒரு திட்டத்திற்கு அரசு ஏற்பளித்திருக்கிறது.

"உயர்நிலைக் கல்வித் துறை பெரிதும் விரிவடைந்திருப்பதன் காரணமாக, கல்லூரிகளில் சேருவதற்கு மாணவர்கள் குவிந்த வண்ணமிருக்கின்றனர்; இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்காக, புதிய கல்லூரிகளைத் திறப்பதன் மூலமாகவும் ஏற்கனவேயுள்ள கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதன் மூலமாகவும் அரசு முயற்சி எடுத்திருக்கிறது.

"புதிய கலைக் கல்லூரிகளைத் திறப்பதற்குப் பொதுமக்கள் வழங்க வேண்டிய நன்கொடைத் தொகை பற்றி அரசு விதித்துள்ள விதிமுறைகள் நிறைவேற்றப்படுகின்ற இடங்களில், 6 புதிய கலைக் கல்லூரிகளைத் திறப்பதற்கு, 1968—69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ளது.

"திருவண்ணாமலை, திண்டுக்கல், செய்யாறு ஆகிய இடங்களில் உள்ள கல்லூரிகளில், பட்டப் படிப்பு வகுப்புகளைத் திறப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"நகரங்களில் புகுமுக வகுப்புகளில் சேர விழையும் மாணவர்களின் எண்ணிக்கை, அவ்வகுப்புகளில் கிட்டும் இடங்களின் எண்ணிக்கையைவிட மிக அதிகமாயுள்ளது என்றும், 'முறை ஏற்பாட்டை'ச் செயல்படுத்தினால் மேலும் ஏராளமான மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வசதியாயிருக்கும் என்றும் நடைமுறை வாயிலாகத் தெரியவருகிறது. ஏற்கனவே கல்லூரிகளிலுள்ள கட்டட வசதிகளையும், ஆய்வுக்கூட வசதிகளையும் முழு அளவில் பயன்படுத்திக்கொள்ள மேலும் இது வழிகோலும்.

"நமது மாநிலத்தில் உள்ள பல்கலைக் கழகங்களைக் கலந்து, கல்லூரிகளில் இம்முறை ஏற்பாட்டினைச் செயல்படுத்துவதைப் பற்றி அரசாங்கம் ஆய்வு செய்யக் கருதுகிறது.

"மதுரைப் பல்கலைக் கழகத்துக்கான கட்டட வேலையைத் தொடங்குவதென்றும் முடிவு செய்து, அதற்கென வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பத்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

"கலைக் கல்லூரிகளை விரிவுபடுத்துவதற்கு வேண்டிய—போதிய அளவு நிதி வசதிகளை வகை செய்யும் அதே வேளையில், மாணவர்களைத் தொழில் நுட்பக் கல்வியின்பால் திருப்பும்வண்ணம் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டியதன் தேவையையும் நாம் கருத்தில் இருத்தியுள்ளோம்.

"கடந்த ஆண்டில், புகுமுகக் கல்லூரி வகுப்பு மாணவர்களுக்குச் சில வருவாய் வரம்புகளுக்குட்பட்டு கல்லூரிச் சம்பளம் செலுத்துவதினின்றும் விலக்களிப்பது குறித்து நாம் எடுத்த முடிவிற்கிணங்க, புகுமுகக் கல்லூரி வகுப்பிற்கு நிகரென்று பல்கலைக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள பல்தொழில் நுட்ப வகுப்புகளுக்கும் இச்சலுகையை விரிவுபடுத்த வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது.

"பல்தொழிற் பள்ளிகளில், புகுமுகக் கல்லூரி வகுப்பு மாணவர்களுச்கு வழங்கப்பட்டிருப்பதைப் போலவே, அதே வருவாய் வரம்புகளுக்குட்பட்டுப் புகுமுகத் தொழில் நுட்ப வகுப்பு மாணவர்களுக்கும் சம்பளம் செலுத்துவதினின்று விலக்களிக்க அரசு முடிவு செய்துள்ளது."

'ஒர்க் சார்ஜ்டு' ஊழியர்களின் வேலை நிலைமை

மாற்றியமைக்க அரசு ஏற்பாடு

சென்னை, பிப். 29—

"'Work Charged' என்ற பெயரில் உள்ள அரசு ஊழியர்கள், நெடுஞ்சாலைப் பணித் துறையில் 15,701 பேரும், பொதுப்பணித் துறையில் 8,222 பேரும், பரம்பிக்குளம் அணைத் திட்டப் பகுதியில் 1,052 பேரும்—ஆக மொத்தம் 25,075 பேர் உள்ளனர்; இவர்களில் நெடுஞ்சாலைப் பணித் துறையில் 2,807 பேருக்கும், பொதுப் பணித்துறையில் 40 சதவிகிதத்தினருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு விட்டது; எஞ்சியுள்ளவர்கட்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

"ஒரு வேலை முடிந்தவிட்டால் அந்தப் பணியாளர்களுச்கு வேறு வேலை நடக்கும் இடங்களில் வேலை கொடுக்கப்படுகிறது"

என்று, பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி, சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

துணைக் கேள்விகட்கு அவர் பதிலளித்ததாவது :—

"அவர்களிடமிருந்து கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் வந்திருக்கின்றன; எல்லாக் கோரிக்கைகளையும் ஆராய்ந்து தக்க விதத்தில் மாற்றியமைக்கும் நோக்கத்துடன் தலைமைப் பொறியரிடம் பரிசீலிக்குமாறு அரசு கேட்டிருச்கிறது; அவர் ஆராய்ந்து பரிந்துரைத்த பின ஆவன செய்யப்படும்."

தனியார் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள்

அரசு மேற்கொள்ளும் எண்ணமில்லை

சென்னை, பிப். 29—

"தமிழகத்தில் உள்ள தனியார் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளை அரசே ஏற்று நடத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை; அவற்றில் ஏதேனும் குற்றங்குறைகள் காணப்பட்டால், அவற்றைக் களைய அரசு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளும்"

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

நிகழ்ச்சிகள்

மார்ச் 2 மாலை 6 மணி: காஞ்சிபுரம்—பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் விடுதி ஆண்டு விழா.

மார்ச் 3 காலை 10 மணி: திருச்சி மாவட்ட கால்நடை கருத்தரங்கு; மாலை 6 மணி: கடலூர்—கைத்தறி வார விழா.

ஏழை--எளியவர்களிடமிருந்து அண்ணா எதிர்பார்க்கும் ரூ. 1-கோடி

ஒவ்வொரு குடும்பமும் உதவுமென நம்பிக்கை

"நடைமுறைக் கணக்கைப் பொறுத்தவரையில் நமது நிதி நிலை கவலை தராதிருப்பினும், வருகிற ஆண்டில் இந்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்களும், வெளிச்சந்தைக் கடன்கள் ஏராளமாகப் பெருகியிருப்பதால், அடுத்த ஆண்டில் நமது வழிவகை நிதி நிலை பெரிதும் இடர்ப்பாடு மிகுந்ததாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு விழிப்புடன் இருக்க வேண்டும்.

"ஆகவே, பொருளாதார வளர்ச்சி காண்பதற்காக நமது மக்களின் சேமிப்பைத் திரட்டுவதற்குப் புதிய முறைகளில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது அவசியமாகும்.

"சிறு சேமிப்புகளைத் திரட்டுவதற்கான தற்போதைய திட்டங்களை முனைந்து செயல்படுகிற நேரத்தில், மாநில வளர்ச்சிக்கு ஏழை எளிய மக்களும் தொகை வழங்குவதற்கு இயலும் வகையில் 'பரிசுச் சீட்டு'கள் நடத்துவதற்கான திட்டமொன்றை வகுப்பது அவசியமென்றும் அரசு உணர்ந்திருக்கிறது.

"இந்தத் திட்டத்தின் விவரங்கள் விரைவில் முடிவு செய்யப்பட்டு அடுத்த நிதி ஆண்டின் தொடக்கத்தில் நிறைவேற்றப்படும்.

'நிதியிடாக் கடன் தலைப்பில்—பரிசுச் சீட்டுத் திட்டத்தின்கீழ் பரிசுத் தொகைகளையும், அனுமதிபெற்ற முகவர்களுக்குத் தரகுத் தொகைகளையும் செலுத்திய பிறகு இத்திட்டத்தின் வாயிலாகக் கிட்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்ற நிகர வரவினம் ஒரு கோடி ரூபாய் அளவில் இருக்குமென நம்புகிறோம்.

"நமது மாநிலத்திலுள்ள ஒவ்வொரு குடும்பமும் இந்தத் திட்டத்தில் பெரும் பங்கு கொண்டு நமது மாநிலப் பொருளாதாரத்தை வளர்க்க உதவியளிக்குமென்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை."

—தமிழக அரசின் 1968-69-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில்

உரத்தின் விலையை ஏற்றியதால் உழவர்கள் படும்பாடு!

மத்திய அரசிடம் தமிழக அரசு முறையீடு

நெய்வேலியில் உற்பத்தியாகும் உரம்கூட நமக்குக் கிடைக்காத வேதனை --- அமைச்சர் கோவிந்தசாமி விளக்கம்

"இந்த ஆண்டு மத்திய அரசு உர வகைகளைக் கூட்டியதன் விளைவாகக் குடியானவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து மத்திய அரசிடம் இந்த அரசு எடுத்துரைத்திருக்கிறது"

என்று சட்டமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி பதிலளிக்கையில் கூறினார்.

மேலும் துணைக் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது :—

"முன்பு தமிழகத்திற்கு 68,000 டன் உரம்தான் மத்திய அரசு கொடுத்தது; இப்போது, 'அதிகம் கொடுக்க வேண்டும்' என்று நாம் வற்புறுத்தியதால் 1,05,000 டன் கூடுதலாகக் கிடைத்துள்ளது.

"அமோக விளைச்சல்உள்ள இடங்களுக்கெல்லாம் கார்டு முறைப்படி உரம் வழங்கப்பட்டு வருகிறது.

"தமிழ்நாட்டில் உரத் தொழிற்சாலை இருந்தும், அதில் உற்பத்தியாகும் உரத்தை விநியோகிக்கும் உரிமை மத்திய அரசுக்கே இருப்பதால், அந்த உரம் தேவையான அளவுக்கு நமக்குக் கிடைக்கவில்லை.

"நெய்வேலியில் உற்பத்தியாகும் உரத்தில் 30 சதவிகிதத்தை வெளிச் சந்தையிலும், 70 சதவிகிதத்தைத் மத்திய அரசிடமும் விற்பது என்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; இவ்வாண்டில் 70 சதவிகிதத்தை வெளிச் சந்தையிலும், 30 சதவிகிதத்தை மத்திய அரசிடமும் விற்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

"அடுத்த ஆண்டு உற்பத்தி முழுவதையும் வெளிச் சந்தையில் விற்க உரிமை வழங்கப்பட்டுள்ளது. வெளிச் சந்தையில் உரம் விற்க அனுமதிக்கப்படுவதால், அவர்கள் விருப்பம் போல் விலையை ஏற்றிவிடுகிறார்கள்!

"நெய்வேலியில் உற்பத்தியாகும் உரம் முழுவதையும் நமக்குக் கொடுக்கும்படி மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். 'எங்களுக்கு மத்திய அரசே உரிமை வழங்கியிருக்கும்போது மாநில அரசு ஏன் குறுக்கிடுகிறது?' என்று நெய்வேலி நிறுவனத்தார் கேட்கிறார்கள்."

அரசுப் பணியாளர்களுக்கு அகவிலைப் படி

மத்திய உதவி கிட்டாத நிலையிலும், மத்திய அரசுப் பணியாளர்களுக்குரிய வீதங்களுக்கேற்ப, தங்கள் அகவிலைப் படி வீதங்களையும் உயர்த்த வேண்டுமென்கிற நமது பணியாளர்களின் வேண்டுகோளை மறுப்பது சரியல்லவென்று அரசு கருதியது. ஆகவே, 1967 டிசம்பர் 1-ம் நாள் சேரவேண்டிய நவம்பர் திங்கள் சம்பளத்திலிருந்து, நமது பணியாளர்களின் அகவிலைப் படி வீதங்கள் உயர்த்தப்பட்டிருப்பதை இப்பேரவையினர் நன்கு அறிவார்கள்.

1967 டிசம்பர் 1-ம் நாளிலிருந்து, 1968 மார்ச் 1-ம் நாள் வரையிலான அகவிலைப் படியினை ரொக்கமாகச் செலுத்தாமல், பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதிக்கு வரவு வைத்து, மார்ச் மாதச் சம்பளத்திலிருந்து சேர வேண்டிய தொகையை ரொக்கமாகச் செலுத்தவிருக்கிறோம்.

இதற்கிணங்க, 1968-69-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அகவிலைப் படி காரணமாக நடைமுறைக் கணக்கில் ரூ. 9.2 கோடி அளவிற்குக் கூடுதல் பொறுப்பு ஏற்படும்.

---முதலமைச்சர் அண்ணா

(நிதி நிலை அறிக்கையில்)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றுவதற்கு முன்னிலும் சிறந்த முறையில்—அதிக நிதி வசதிகளைச் சட்டபூர்வமான அடிப்படையில் அவைகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், அன்றாட நிதித் தொடர்புகளில் மாநிலங்களுக்கும் – மத்திய அரசுக்குமிடையே பிணக்குகளும், எதிரெதிர் குற்றச்சாட்டுக்களும் நிகழ்வதற்கான வாய்ப்புகள் குறைந்து, நாட்டிற்குப் பொதுவான எல்லாச் செயல்களிலும் மத்திய அரசுக்கும் -- மாநிலங்களுக்குமிடையே உடன்பாடு மிகுந்த பயனுள்ள கூட்டு மனப்பான்மை வளர்ந்திடவும் இயலும் என்று நான் சாற்ற விரும்புகிறேன்."

—(நிதி நிலை அறிக்கையில்)

ஏழை--நடுத்தர மக்களுக்கு அநீதி!

மொரார்ஜியின் இரக்கமற்ற கொடுஞ்செயல்!

நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் அன்பழகன் கண்டனம்

புதுடில்லி, மார்ச் 1—

"மொரார்ஜி தேசாய் உருவாக்கியிருக்கும் வரவு - செலவுத் திட்டம் பணக்காரர்களுக்கு வேண்டுமானால் பக்குவமான ஏற்பாடாக—பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சையாக இருக்கலாம்; ஏழை - நடுத்தர மக்களுக்கு அது ஓர் இரக்கமற்ற சித்திரவதைக் கொடுமையாகும்"

என்று, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் கருத்தறிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது :—

"ஏழை எளிய மக்களின் தகவல் போக்குவரத்துச் சாதனமாக உள்ள அஞ்சல் அட்டை – உறைகளையாவது விலை ஏற்றாமல் விட்டுவைத்திருக்கலாம்.

"தமிழகம் போன்ற மாநில அரசுகள் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த எடுத்துக்கொள்ளும் முயற்சிகளை, இந்த மத்திய வரவு - செலவுத் திட்டம் குலைத்துவிடும்."

பொதுக்கூட்டங்கள்

2--3--68

கோட்டை--ஈரோடு

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு பாரதிதாசன் திடலில் (சேட் காலனி); தலைவர்: எஸ். பொன்னிவளவன்; பேசுவோர்: திருவை ஆ. அண்ணாமலை, மு. சின்னசாமி எம்.எல்.ஏ., ப. ச. விசுவநாதன், செ. அரங்கராசன் எம்.சி., மா. சுப்பிரமணியம் பி,ஏ.பி.எல்., திருமதி சேதுபாஸ்கரன் எம்.பி.பி.எஸ்.,

வில்லிவாக்கம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு பஸ் நிலையம் அருகில்! தலைவர்: டி. எம். பார்த்தசாரதி; பேசுவோர்: அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, அன்பில் தருமலிங்கம், கோவை செழியன், அ. பொ. அரசு எம்.எல்., ஆ, பலராமன்.

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

மார்ச் 2 காலை 9-மணி: சித்தமல்லி (நீடாமங்கலம் ஒன்றியம்) பள்ளிக் கட்டடத் திறப்பு; 11-மணி: மன்னார்குடி — துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் சங்கக் கூட்டம்: பேருரையாற்றலும் சீருடை வழங்கலும்; மாலை 3-மணி: மன்னார்குடி–கீழ்த் தஞ்சை மாவட்ட உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாநாடு: 5-மணி: மன்னார்குடி தேசிய உயர்நிலைப் பள்ளி விளையாட்டுப் போட்டி வெள்ளி விழாவும், பரிசுகள் வழங்கலும்; இரவு 7-மணி: மன்னார்குடி--பொதுக் கூட்டம்.

தி. மு. க.-வின் தமிழக அரசு

ஓராண்டு நிறைவு விழாச் சிறப்பு மலர்

தி.மு.க.-வின் தமிழக அரசு ஓராண்டுச் சாதனைகளைப் பற்றி விளக்கம் தரும் அரிய ஏடு. இப்படி ஒரு மலர் இதுவரை வரவில்லை என மாற்றார் மருள—கழகம் வியக்க

மார்ச் 10-ம் நாள் வெளியிடப்படுகிறது

விலை ரூ. 1.50 - தான்

தொடர்பு கொள்க:

எஸ். எஸ். எம். பப்ளிகேஷன்ஸ்,

41, சூளைமேடு நெடுஞ்சாலை, சென்னை - 24 செம்பி

'நம் நாடு'

பத்திரிகையின் விவரங்களும், மற்றும் அதன் உரிமையாளரைப் பற்றிய விவரங்களும்

நமூனு 4. (8-வது விதியைக் காண்க)

1.	வெளியாகும் இடம்	—	சென்னை
2.	வெளியிடும் நாட்கள்	—	நாள்தோறும் (ஞாயிறு தவிர)
3.	அச்சிடுவோரின் பெயர்	—	இரா. செழியன்
	இனம்	—	திராவிடர்
	முகவரி	—	24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13
4.	வெளியிடுவோர் பெயர்	—	இரா. செழியன்
	இனம்	—	திராவிடர்
	முகவரி	—	24, சூரிய நாராயண செட்டித் தெரு, சென்னை-13
5.	ஆசிரியரின் பெயர்	—	இரா. செழியன்
	இனம்	—	திராவிடர்
	முகவரி	—	24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13
6.	பத்திரிகையின் உரிமையாளர்களுடைய பெயர்களும், முகவரிகளும் அல்லது பத்திரிகையின் மொத்த மூலதனத்தில் ஒரு சதவிகிதத்திற்கு அதிகமான பங்குகொண்டுள்ளவர்களின் பெயரும் முகவரியும்	—	திராவிட முன்னேற்றக் கழகம்; மேற்படி கழகத்தின் சார்பில் இரா. செழியன், 24, சூரியநாராயண செட்டித் தெரு. சென்னை-13

என் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்தமட்டில் மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை என்று இரா. செழியனாகிய நான் உறுதியளிக்கிறேன்.

29—2—68

(ஒப்பம்) இரா. செழியன்
வெளியிடுபவர்

சட்டமன்றத்தில்..!

[போகாத நிருபர்]

'இல்லை; போ' என்று மருமகள் கூறியதைக் கேட்டுத் திரும்பிக்கொண்டிருந்த பிச்சைக்காரனுக்கு, 'இந்தாப்பா, இங்கே வா' என்ற அதிகாரக் குரல் கேட்டது; இப்போது அழைத்திருப்பது மாமியார்; ஆசையுடன் திரும்பிச் சென்ற அவனிடம், மாமியார் கூறினாள்—" அவள் என்ன -- 'இல்லை' என்று சொல்லுவது? நான் சொல்லுகிறேன் -- 'இல்லை' என்று! போ!"

தமிழகச் சட்டமன்றத்தில் நேற்று துவங்கியிருக்கும் நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்ட காங்கிரசு உறுப்பினர்கள், ஏறத்தாழ இந்த மாமியாரைப்போலத்தான், தங்களுடைய மனப்போக்கினைக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள்; ஏனெனில், 'பட்ஜெட்' பற்றிச் சட்டமன்றத்துக்கு வெளியே அவர்களுடைய தலைவர் தெரிவித்திருந்த கருத்தும் அதுபோலத்தான் இருந்தது; எனவே அவர்களது சட்டமன்ற உரைகளும், அந்தக் கருத்தைப் பின்பற்றியே இருந்ததில் ஆச்சரியமில்லை!

"அண்ணாதுரை புதிய வரிகள் போடாதது என்ன அவ்வளவு பெரிய ஆச்சரியம்? வரிகள் ஏதும் போட முடியாது—எனவேதான் போடவில்லை" என்று கூறி, தமிழக அரசின் வரி இல்லாத 'பட்ஜெட்' பற்றித் தங்கள் உள்மனம் உவகை கொள்வதை வெளியே காட்டிக்கொள்ளாமல் இருக்க முயற்சித்திருக்கிறார்கள்!

இன்னொன்றையும் கவனிக்கவேண்டும்; 'புதிய வரிகளே இனி போட முடியாது; எனவேதான் போடவில்லை' என்று சொல்லுவது, திருப்பி அவர்களையே தாக்குவதாகத்தான் இருக்கிறது என்பதை அவர்கள் உணர மறுப்பது பரிதாபமாக இருக்கிறது!

கழக அரசு வந்து சுயமாகப் போடும் முதல் 'பட்ஜெட்' இதுதான். சென்ற 'பட்ஜெட்', முடிந்துவிட்ட காங்கிரசு ஆட்சிக்கு வைத்த ஒரு முற்றுப் புள்ளியைப்போல்!

இந்த நிலையில், காங்கிரசார், 'வரிகள் இனி போட முடியாது; எனவேதான், முதலமைச்சர் போடவில்லை' என்று கூறுவது, 'அடே அப்பா! அவ்வளவுக்கு ஏற்கனவே போட்டுவிட்டுப் போய்விட்டார்களா?' என்று பொதுமக்கள் திருப்பிக் கேட்பதற்கு இடமளிக்கிறது!

விவாதத்தினைத் துவக்கிவைக்கும் பொறுப்பு இந்த முறையும் காங்கிரசுக் கட்சிக்குத்தான் சென்றிருக்கிறது! மத்திய அரசு, சென்ற ஆண்டைவிட ரூ. 5 கோடி அதிகமாக ஒதுங்கியிருப்பதனை மட்டும் பூதக் கண்ணாடி போட்டுப் பார்க்கும் திரு. காசிராமன், கழக நிர்வாகம் கல்வித் துறைக்கு மட்டும் காங்கிரசு ஆட்சியைவிட ரூ. 13 கோடி ஒதுக்கியிருக்கும்போது, 'புதுடில்லி ஒதுக்கிய ரூ. 5 கோடி எந்த மூலைக்குச் சென்று ஒதுங்கும்' என்பதனை அறிய மறுத்திருக்கிறார்!

'வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கீடு குறைவு' என்று குறைபட்டிருக்கும் அவர், மின்சாரத் துறைக்கு மட்டும் ரூ. 3.36 கோடியும், விவசாயத்துக்கு ரூ. 2 கோடியும், சென்னைக் குடிநீர்த் திட்டம் போன்றவைகளும் 'பட்ஜெட்'டில் இருப்பதனை மறைத்தோ—மறந்தோ பேச முயற்சித்திருப்பது வரவேற்கத்தக்கதாக இல்லை!

தமிழக நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் துவங்கிய சில மணி நேரத்திற்குப் பின்னர்தான், மொரார்ஜி தேசாயின் 'பட்ஜெட்' வெளியாயிற்று; அதில் மத்திய நிதியமைச்சர், நாட்டில் பல ஆண்டுகளாக நிலவி வருவதாகக் குறிப்பிட்டுள்ள—

உணவுப் பற்றுக்குறை;
மூலப் பொருள் போதாத தன்மை;
விலைவாசி ஏற்றம்;
ஏற்றுமதிக் குறைவு;
தொழில் துறைத் தேக்கம்;
மூலதன மார்க்கெட்டின் மந்த நிலை,

ஆகிய கூறுகளை இனியாவது காங்கிரசு உறுப்பினர்கள், தங்கள் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்தினால், 'தமிழகத்தில் தொழில்துறை அமைதியின்மை அல்லது முன்னேற்றம் போதாத நிலை' என்ற குறைபாடுகளைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய அவசியத்திற்கு இடமில்லாமலிருக்கும்!

தாய் உண்ணும் உணவுக் கோளாறுகளினால் தான் குழந்தைக்கு மாந்தம் வருமென்பதைக் காங்கிரசு உறுப்பினர்கள், பிறர் கூறித்தான் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை! குடும்பத் தலைவர்கள் அனைவரும் அறிந்த உண்மை இது!

மத்திய அரசின் தவறு அல்லது குறைபாடுகளினால் நாடு முழுவதும் அனுபவித்துத் தீரவேண்டிய சில பிரச்சினைகளுக்காக—'ஆளுவது வேறு கட்சி' என்பதற்காகக் காங்கிரசார், தனித்துக் குற்றஞ்சாட்டிப் பயனில்லை! அவர்கள் கட்சியே ஆளும் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியோ, எடுத்துக் காட்டியோ அத்தவறுகளைத் திருத்த முயற்சிக்கலாம்."

தமிழக அரசினர் நிதி நிலை அறிக்கையில், மத்திய அரசை நோக்கித் தரப்பட்டிருக்கும் சில கோரிக்கைகள்—அறிவுரைகள்—காங்கிரசு உறுப்பினர் திரு மகாதேவன் அவர்களுக்கு, 'கருணை மனு'வாகத் தோற்றமளித்திருக்கிறது! 'பழக்கத் தோஷம்' அவ்வளவு சுலபத்தில் மறையக் கூடியதல்லவே!

கவர்னர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் அண்ணா அரசு எச்சரித்துள்ள—எடுத்துக் காட்டியுள்ள மத்திய--மாநில அரசின் அதிகார உறவு முறைகள் புதுடில்லியைக் கலக்கிக்கொண்டிருக்கும்போது, அது இங்கே உள்ள காங்கிரசு உறுப்பினருக்கு, 'கருணை மனு'வாகத் தென்படுவதனை, 'பழக்கத் தோஷம்' என்று அழைக்காமல் வேறு என்னவென்று அழைப்பது?

★

நிதி நிலை அறிக்கையின் மீதான ஆறு நாள் விவாதத்தில், நேற்ற கழக உறுப்பினர்கள் ஐவர் இடம் பெற்றுள்ளனர்.

படி அரிசித் திட்டத்தில் காங்கிரசார் காட்டும் இரட்டைப் போக்கினை எஸ். முருகையன் வெட்ட வெளிச்சமாக்கியுள்ளார். 'கொள்முதல் விலையினையும் கூட்டித் தர வேண்டும்; படி அரிசித் திட்டத்தினையும் விரிவுபடுத்த வேண்டும்; ஆனால், அதற்காக அரசாங்கப் பணமும் செலவழிக்கப் படக்கூடாது' என்று —சமயத்துக்கேற்றவாறு பேசும் காங்கிரசுக்காரர்களுக்கு, அவரது உரை ஜீரணிக்க முடியாத ஒன்றுதான்!

உணவு உற்பத்தியில் உபரியையும், அதோடு விவசாயத் துறைக்குக் கூடுதலாக ரூ. 2 கோடியும் ஒதுக்கியிருக்கும் நிதி நிலை அறிக்கைக்கு மற்றொரு பாராட்டு, சி. கிருஷ்ணமூர்த்தி அவர்களிடமிருந்து கிடைத்திருக்கிறது. 'தஞ்சை மாவட்டத்துக்குத் தண்ணீர் வரி தள்ளுபடி தர வேண்டும்' எனவும் அவர் சிறப்பாகக் கோரியுள்ளார்.

உணவு—தொழில் ஆகிய இரு துறைகளைப் பற்றியும் பேசியிருக்கும் சி. ஜி. விசுவநாதன், தொழில் துறை வளர்ச்சிக்கு மத்திய அரசின் அனுசரணை இன்னும் சற்றுக் கூடுதலாகத் தேவைப்படும் நிலையினை வலியுறுத்தியுள்ளார். தமிழக அரசின் தீவிர சாகுபடித் திட்டத்தின் பெருமை, அவரது உரையினில் பளிச்சிடுகிறது!

"பருவ மழை பொய்த்திருக்கிறது; ஆனால், அண்ணாமீது தமிழகம் கொண்டிருக்கின்ற நம்பிக்கை பொய்த்துவிடவில்லை" என, முதலமைச்சர் உபரி 'பட்ஜெட்' அளித்திருப்பதனை வரவேற்று, ஜே. எஸ். இராசு மகிழ்ந்திருக்கிறார்!

காங்கிரசாரின் எண்ணம் தூளாகும் வகையில் ஒரு 'சமுதாய நல பட்ஜெட்'டினை அளித்திருக்கும் அண்ணாவின் திறமையை மெச்சியிருக்கும் அவர், படி அரிசித் திட்டம் பற்றிய காங்கிரசாரின் பேச்சுக்கள், 'ஓர் அரசியல் கூக்குரல்' எனப் பெயரிட்டிருப்பது பொருத்தமான விமர்சனமாக இருக்கிறது!

'சென்னை நகரைச் சார்ந்தவரில்லை' என்றாலும், 1965—66-ம் ஆண்டுகளில் இங்கே தெருக்களில் அரிசிக்காக மக்கள் மணிக்கணக்கில் நின்ற கொடுமையினைக் கண்டவர் என்ற முறையில் என். இராஜாங்கம், இப்போது சென்னையில் அந்த அவலம் இல்லாத நிலை வந்திருப்பது பற்றிப் பெருமைபட்டிருப்பது, படி அரிசித் திட்டத்தின் மாண்பினைக் காட்டுவதற்காகத்தான்! 'அண்ணாவின் இந்தப் பட்ஜெட், மற்ற மாநிலங்களுக்கெல்லாம் ஒரு 'முன்மாதிரி' (மாடல்) என்று அவர் கூறி, மகிழ்ச்சி காட்டியிருக்கிறார்!

★

மத்திய அமைச்சர்கள் இங்குள்ள தமிழ்நாடு காங்கிரசுக்காரர்களை, சில பல வேளைகளில் 'பயங்கர'மாகக் காட்டிக் கொடுத்துவிடுகிறார்கள்!

தமிழகத்தில் நடைபெறும் கழக நிர்வாகம் பற்றி அவர்கள் அங்கேயும்—இங்கே வரும்போதும் பாராட்டிச் செல்வது, ஏற்கனவே கருத்திருமனின் கோபத்துக்கு இடமளித்திருக்கிறது! ஐதராபாத்தில் நடந்த கட்சி மாநாட்டில் இதுபற்றி அவர், வெளிப்படையாக கோபித்துக்கொண்டும் வந்திருக்கிறார்!

இந்த நிலையில், கோவையில் நடந்த கொடி எரிப்புச் சம்பவத்துக்காக அவர் கொண்டு வந்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்துக்குத் தொழில் அமைச்சரும் பொதுப்பணி அமைச்சரும் தக்க விளக்கமளித்துள்ளனர் என்றாலும், கருத்திருமன் கட்சியான காங்கிரசு ஆளும் மத்திய அமைச்சரவையில் உள்ள பொறுப்புமிக்க உள்துறை அமைச்சர் சவாண், தமிழக அமைச்சர் மாதவன் அவர்களிடம் கழக நிர்வாகம் பற்றியும், அதிலும் குறிப்பாக இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் நிலைமைகளைச் சமாளிக்கும் தமிழக அரசின் திறமை பற்றியும் பாராட்டியிருப்பது, இங்கே உள்ள காங்கிரசுக்காரர்களுக்குக் காணிக்கையாக இருக்கிறது!

தமிழகத்தின் எதிர்க் கட்சித் தலைவர், மீண்டும் மீண்டும் இப்படி அவரது கட்சிக்காரர்களாலேயே—அதுவும் மேலிடத்துக்காரர்களாலேயே—பரிதாபத்துக்கு ஆளாக்கப்பட வேண்டாம்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.